தேதி - 10.08.2022 அ.வ.எண்.106/2018 பி.சா.1 (மனோகரன்)

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி

பி.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் என்னிடம் தான் உள்ளது. அசலை நீதிமன்றத்தில் வேண்டும் என்ற போது தாக்கல் செய்கிறேன். பிசா.ஆ.1 ஆவணத்தில் கூட்டாண்மைநிறுவனத்தில் இருந்து வாதி பணம் பெற்றுக் கொண்ட விபரங்கள் எதுவும் இல்லை. பி.சா.ஆ.1 ஆவணத்தில் 2ம் பிரதிவாதியான என்னுடைய மனைவியை எங்களது கூட்டாண்மையில் சேருவதற்காக வாதி கூட்டாண்மையில் இருந்து விலகியதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தின் புகைப்பட நகலை தாக்கல் செய்துள்ளதால் மேற்படி ஆவணம் ஏற்புடையதல்ல என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.4 ஆவணத்தில் பாகப்பிரிவினை என்றோ, பாகஜாபிதா என்றோ, பாகவிஸ்தி அக்ரிமெண்ட் என்றோ, பாகவிஸ்தி லிஸ்ட் என்றோ தலைப்புகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.4 ஆவணத்தில் எங்களது சகோதரிகளை நான் எனது எதிர்வழக்குரையில் சொன்னது போல் சேர்க்கவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.4 ஆவணத்தின்படி என்னுடைய சகோதரிகளுக்கு எந்த பாகமும் ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.4 ஆவணத்தில் வாசுதேவன், சுப்பிரமணியன், பாரஸ்மால் ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்துள்ளனர். மேற்படி சாட்சி கையொப்பம் செய்தவர்களை விசாரித்தால் பி.சா.ஆ.4 ஆவணம் நடைமுறைக்கு வந்ததா இல்லையா என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். பி.சா.ஆ.4 ஆவணத்தில் வாதியும், 1ம் பிரதிவாதியான நானும் தாவாச் சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டதாக அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு ரூ.5,08,000 பணம் கொடுப்பதாக தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.4 ஆவணத்தின்படி சொத்துக்கள் எதுவும் பிரிக்கப்படவில்லை என்றும், வாதி பெயரிலும், என் பெயரிலும் நாளது தேதி வரை உள்ளது என்று சொன்னால் சரிதான். தனித்தனியாக என்னுடைய பெயரிலோ, வாதி பெயரிலோ பட்டாக்கள் எதுவும் இல்லை. பி.சா.ஆ.4 ஆவணத்தில் கண்டுள்ள சரத்துக்களின்படி நான் நடந்து கொள்ளவில்லை என்பதால் தான் சொத்துக்கள் இன்னும் பிரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் நடந்து கொண்டேன். பி.சா.ஆ.4 ஆவணத்தின்படி ரூ.5,08,000 வாங்கியதற்கான இரசீதுகள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பி.சா.ஆ.4 ஆவணத்தின்படி வாதி நடந்து கொள்ளவில்லை என்று வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் இல்லை. நேரடியாக பலமுறை சென்று கேட்டேன். நான் வாதியிடம் நேரடியாக சென்று கேட்கவில்லை என்றும், தற்போது வழக்கிற்காக நேரில் சென்று கேட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. பி.சா.ஆ.4 ஆவணம் தற்போது வரை நடைமுறைக்கு வரவில்லை

என்று சொன்னால் சரியல்ல. வாதி பாகம் பிரித்துக் கொடுக்கும்படி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கு பதில் எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். இன்றைய தேதி வரை தாவாச் சொத்துக்கள் அனைத்தும் பொதுச்சொத்துக்களாகத் தான் நானும், வாதியும் அனுபவம் செய்து வருகிறோம் என்றும், எனவே தாவாச் சொத்துக்களில் வாதிக்கு 1/2 பாகம் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலம் மற்றும் எதிர்வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகள் இவ்வழக்கிற்கு முரணாக உள்ளதால் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.